செ. கு. எண்: 125 நாள்: 26.05.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 26.5.2013

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், அருவிக்கரை கிராமம், அண்டூர் பகுதியைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மகன் பிரபாகரன் 13.4.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் அண்டூர் அருகே சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், திருவிதாங்கோடு கிராமம், தென்னிவிளை பகுதியைச் சேர்ந்த திரு. அந்தோணி என்பவரின் மகன் ஆலிவர் மற்றும் தென்னிவிளை முகமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சார்லஸ் என்பவரின் மகன் பெலிக்ஸ் சேவியர் ஆகிய இருவரும் 17.4.2013 அன்று புலியூர்குறிச்சி அருகே இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

இராமநாதபுரம் மாவட்டம், குஞ்சார்வலசை கிராமம் அருகே, 6.5.2013 அன்று மதுரை – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் இராமேஸ்வரத்திலிருந்து தஞ்சாவூர் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும், மதுரையிலிருந்து இராமேஸ்வரம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், மதுரையைச் சேர்ந்த பேருந்து ஓட்டுநர் திரு. கார்த்தீஸ்வரன் சம்பவ இடத்திலேயும், பட்டுக்கோட்டை வட்டம், மகிலன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் மற்றும் அவரது மனைவி திருமதி வாசுகி ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், சந்தவேலூர் கிராமம், சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் 6.5.2013 அன்று நடந்து சென்று கொண்டிருந்த கண்டிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவர் மீது அரசுப் பேருந்து மோதியதில், அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பழனி பிரதான சாலையில் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது 14.5.2013 அன்று அரசுப் பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருப்பூர் நகரைச் சேர்ந்த திரு. நிஜாம் என்பவரின் மகன் பரூக் மற்றும் திண்டுக்கல் நகரைச் சேர்ந்த திரு. கமால்தீன் என்பவரின் மகன் சாமியாலு என்கிற பாபு ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், செக்கணம் கிராமம், மஜரா கருங்குளம் அருகே 17.5.2013 இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த புதுக்கோட்டை மாவட்டம், துலுக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துப்பாண்டி என்பவரின் மகன் ராஜ்குமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், நமுனாசமுத்திரம் கிராமம் அருகே 20.5.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மாமரத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆரோக்கியசாமி என்பவரின் மகன் ஆனந்த் சம்பவ இடத்திலேயும், வலையப்பட்டியைச் சேர்ந்த திரு. செபஸ்தியர் என்பவரின் மகன் ஆனந்த் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த பிரபாகரன், ஆலிவர், பெலிக்ஸ் சேவியர், பேருந்து ஓட்டுநர் கார்த்தீஸ்வரன், கணேசன், வாசுகி, கண்ணன், பரூக், சாமியாலு என்கிற பாபு, ராஜ்குமார், திரு. ஆரோக்கியசாமி என்பவரின் மகன் ஆனந்த் மற்றும் திரு. செபஸ்தியர் என்பவரின் மகன் ஆனந்த் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**